DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 164 /2021

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : Balamurugan | Father/Husband Name | : Muthukaruppan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 15.12.21 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் ஒத்தக்கடை திருமோகூரில் வசிக்கிறேன். பூக்கடை நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடைதுதான். 25.07.20ம் தேதி மாலை 05.30 மணியளவில் திருமால்நகரிலுள்ள வக்கீல் வீட்டில் இருந்தபோது ஒத்தக்கடை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அங்கு வந்து திருடுபோன வீட்டில் விசாரித்து பார்வையிட்டு எழுதியதை படித்துக்காண்பித்து கையெழுத்து கேட்டதன்பேரில் நானும் விஸ்வா என்பவரும் கையெழுத்து செய்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

வக்கீலின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. பூக்கடைக்கும் வக்கீலின் வீட்டிற்கு எவ்வளவு தொலைவு என்றால் 100 அடி இருக்கும். வக்கீல் வீட்டு முன்பாக யார் யார் வீடுகள் உள்ளது என்றால் இருபக்கத்திலும் காலியாக உள்ளது, முன்பாக யார் வீடு உள்ளது என்று தெரியாது. வழக்கறிஞரின் வீடு எந்த திசை நோக்கி உள்ளது என்றால் கிழக்கு நோக்கி உள்ளது. வழக்கறிஞர் வீட்டின் வடக்கு மற்றும் தெற்கில் யார் யார் வீடு உள்ளது என்றால் தெரியாது. அவர் வீட்டை சுற்றி உள்ள வீடுகளின் உள்ள நபர்களின் பெயர்கள் தெரியாது என்றால் சரிதான். எங்கு வைத்து போலீசார் வைத்து படம் வரைந்தனர் என்றால் வக்கீலின் வீட்டு வசலில் வைத்து. வழக்கறிஞரின் வீட்டு மாடியின் வாசல் எந்த திசை நோக்கி என்றா் கிழக்கு திசைநோக்கி, நான் கிழக்கு திசை என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வீட்டினுள் சம்பவம் நடந்த இடம் எந்த திசை என்றால் தெரியாது. விஸ்வா என்னுடன் இருந்தாரா என்றால் நாங்கள் வந்துகொண்டிருந்தோம், விசாரித்து

கையெழுத்து வாங்கினார்கள். திசைகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் மாடி வீட்டிற்கு போகவில்லை என்றல் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில்வைத்துதான் எங்கள் இருவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன். நான் பூக்கடை வைத்திருப்பதால் போலீசார் தயவு தேவை என்றால் தேவையில்லை. நான் போலீசார் அழைத்து பல வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல, இந்த வழக்கில்தான் நான் முதன் முதலாக சாட்சியம் சொல்கிறேன் நான் வழக்கிற்காக போலீசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விஸ்வா என் உறவினர் என்றால் சரிதான்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 164 /2021

Deposition of witness for: PW - 8

| | | | |
|---|---|---|---|
| Name | : Shanthi | Father/Husband Name | : Nagarajan |
| Caste | : | Calling | : Head Clerk |
| Religion | : | Age | : |
| Date | : 15.12.21 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் தற்போது மேலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.09.21ம் தேதி இந்த வழக்கின் சொத்தான 111.5 கிராம் எடையுள்ள தங்க கட்டியை நீதிமன்ற உத்தரவுப்படி ஆர்.பி.ஆர். எண்.127-21 என்ற எண்ணை பதிவு செய்து நீதிமன்ற பாதுகாப்பில் வைத்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

படிவம் 95ல் சிறிய துண்டுகள் இரண்டு என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.